# திறவுகோல்

2051 கார்த்திகை
மாத இதழ்



ஓவியம்:
இரா.மதுவர்சினி,
சரஸ்வதி வித்யாலயா பள்ளி,
பெருவிடைமருதூர்

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# மார்ச்சுவரி..!

நெஞ்சாங்கூடு மேலும் கீழுமாக மூச்சிரைக்க உடலின் கதகதப்பு குறைந்து விறைப்பது போன்ற உணர்வு அவனை உந்தியது, கை கால்களை அசைக்க முயன்றான் ஆனால் அவைகள் அவனின் இழுவைக்கு ஒத்துழைக்கவில்லை. மீண்டும் முழு பலத்துடன் இழுக்க ஒரு வலியுணர்வுடன் கை கால்கள் விடுபட்டன..

மெதுவாக எழுந்து அமர முயற்சி செய்து தலையை உயர்த்தினான் மடாரென தலைமோதி மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பியது, நீண்ட மெனக்கெடலுக்கு பின் ஒருக்களித்து படுத்தான்..

அந்த இடம் அவனுக்கு புதிதாக தோன்றியது, கும்மிருட்டில் நான்கு பக்கமும் ஜில்லிட்ட ஐஸ்கட்டிகள் அவனை உருகுநிலைக்கு கொண்டு செல்வதாக எண்ணினான். அவனுக்கு தெரிந்த முகங்கள் எதுவும் கண்ணுக்கு புலப்படவில்லை..

விடிந்தும் விடியாததுமாக அவன் படுக்கையில் இடம்பிடிக்க மல்லுக்கட்டும் செல்ல நாய் டாமி, சலிப்போடு எழுந்து வந்தால் தலைகுளித்து ஈரம் சொட்டும் கூந்தலோடு அவளுக்கே உரிய இன்ஸ்டா புன் சிரிப்புடன் அவனை எதிர்கொள்ளும் மனைவி கீர்த்தனா. கூடத்தின் நடுவில் உள்ள மர ஊஞ்சலில் அன்றைய செய்திதாள்களின் செய்திகள் அனைத்தையும் வரிவிடாது வாசித்து முடித்து அதனைபற்றி மனைவி கமலாவிடம் 'நம்ம காலத்தில எல்லாம் இப்படி இல்ல, இப்ப எல்லாம் மாறிப்போச்சு' என அளவளாவும் ஓய்வுபெற்ற ஆசிரியர் அப்பா சண்முகம் அதற்கு அசராமல் ஆமாம் சாமி போடும் அம்மா கமலா என யாருமின்றி வெறுமையாக இருப்பதை உணர்ந்தான்..

பதறியடித்தவன் தன் முழுபலத்தை பிரயோகப்படுத்தி அதனை உடைத்துக்கொண்டு வெளியேறினான், மங்கலான பல்பின் வெளிச்சத்தில் அந்த அறை முழுவதும் அதுபோன்ற பெட்டிகள் ஏராளம். மெதுவாக எழுந்து நடந்தவன் பெட்டிகளை கடந்து முன்னேறி சென்றான் அங்கிருந்த டேபிள் மேல் வரிசையாக உடல்கள் கிடத்தி வைக்கப்பட்டிருந்தன. முதலில் அவைகளை பார்க்க தயங்கியவன் பிறகு வரட்டு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஏறிட்டு பார்த்தான். நாற்பது வயது மதிக்கதக்க ஆணின் முகம் முற்றிலும் சிதைந்து, கண்கள் பிதுங்க மண்டையோடு பிளந்து மல்லாக்க கிடந்தது. வற்றிய உதட்டின் வெடிப்புகள் எரிய உமிழ்நீரால் ஈரமாக்கி மீண்டும் உமிழ்நீரை உள்ளிழுத்துக்கொண்டான்..

அடுத்த உடலை நோக்கி நகன்றவன் எதிரில் இருந்த பாதரசமில்லா கண்ணாடி மங்கலாக அவனை பிரதிபலித்தது. கைகளால் கண்ணை கசக்கிவிட்டு மீண்டும் கண்ணாடியை பார்த்துவிட்டு ஓ என கதறியழுதவாறு தலையை எடுத்து முண்டமாய் இருந்த  உடலில் நிறுத்தினான், முகத்தை தடவி காணாமல்போன இடபக்க காது

வலபக்க கண், பிய்ந்து தொங்கும் உதடு அதனிடையே இல்லாதுபோன பற்களின் கோரமுகத்தின் அலறல் அறையை கடந்து வெளியிலும் ஒலிக்க.

தட தடவென ஓடிவந்தான் மார்ச்சுவரி காவலன் மூர்த்தி. ஐம்பது வயது மதிக்கதக்க மாநிறம் , காக்கி பேன்ட் வெள்ளை சட்டை, முன்தலை வழுக்கை அந்த காலத்து நம்பியார் ஸ்டைலில் மீசையென தள்ளாடியபடி.,

ஏய் 501 போய் படு, இங்க என்ன உனக்கு வேலை..?!

எதுக்கு நீ இப்படி கத்துற என இடுப்பில் மறைத்து வைத்திருந்த கோட்டர் பாட்டிலில் இருந்த மதுவில் தொண்டையை நனைத்துக்கொண்டு அவனருகில் சென்றான்.

நான் 501 இல்ல என் பெயர் சாந்தகுமார்.,

தம்பி இங்க வந்திட்டா எல்லாருமே எங்களுக்கு நம்பர்தான் எந்த வித்தியாசமும் கிடையாது, புரியுதா..?!

நீங்க எப்படி வேணும்னாலும் கூப்பிடுங்க சார் ப்ளீஸ் என்ன விட்டுடுங்க நான் எங்க வீட்டுக்கு போயிடுறேன்.,

யோவ் நீ என்ன பிக்னிக்கா வந்திருக்க..?

அப்படியெல்லாம் விடமுடியாது., சும்மாவே பிணங்களை எலிகடிச்சு வச்சிட்டுபோயிடுது, இப்ப எல்லாம் அதனாலதான் வாசலிலையே காவலுக்கு இருக்கேன்.,

நீயும் சேர்ந்து கொடுமை செய்யாம போய் படு.,

அண்ணே எனக்கு என்னதான் நடந்துச்சு.?

நான் எப்படி இங்க வந்தேன்.?

என்னப்பா உன்னோட ஒரே இழவா இருக்கு, உன்னால அடிச்ச போதையும் இறங்கிபோச்சு..!

யோவ், பஜார்கடை தெருவுல நீ பைக்ல வேலைக்கு போகும்போது பின்னால வேகமாவந்த தண்ணி வண்டி மோதி அந்த இடத்திலையே துடிதுடிச்சு செத்துபோயிட்ட.

யாருமே என்ன காப்பற்ற வரலையா.?

எல்லாரும் வந்தாங்க போட்டோ புடிச்சு பேஸ்புக்ல போட்டாங்க ஆழ்ந்த இரங்கல்னு, சிலபேரு டிரைவர திட்டியும் அரசாங்கத்தை திட்டியும் பதிவு போட்டுட்டு அவனவன் வேலையை பார்க்க போயிட்டான்.

டிரைவர் போதையில வண்டி ஓட்டியிருப்பான் போல இடுப்புக்கு கீழ எதுவும் இல்லப்பா, ரோட்ல இருந்து வழிச்சுதான் எடுத்துவந்து போட்டோம்.

உன் பொண்டாட்டி, அம்மா எல்லாம் ஒரே அழுகை மார்ச்சுவரி வாசல்லதான் காலையில இருந்து கிடந்தாங்க..!

ஐயோ ஆண்டவா.!

எனக்கு ஏன் இப்படி ஒரு சாபத்தை தந்த, நான் யாருக்கும் எந்த பாவமும் செய்யலையென தரையில் விழுந்து அழுதான்.

இப்ப எதுக்கு கத்துற இது எல்லோருக்கும் வர்ரதுதான, உனக்கு கொஞ்சம் சீக்கிரம் வந்துருச்சு அவ்ளோதான் என்றாவறு சட்டைபைக்குள் இருந்து எடுத்த ஹான்ஸ் புகையிலையை எடுத்து உதட்டோரமாய் ஒதுக்கிகொண்டான்.

நான் செய்யவேண்டிய கடமை நிறைய இருக்கு சார்.,

மாசமான வீட்டுக்கு வாங்குன லோனுக்கு பணம் கட்டனும், அப்பா அம்மாவுக்கு சுகர், பிரசர் மாத்திரை மருந்துகள் வாங்கி கொடுக்கனும். என்னோட பொண்டாட்டி கல்யாணமாகி அஞ்சு வருசத்துக்கு பிறகு இப்பதான் முழுகாம இருக்கா அவள ஹாஸ்பிட்டல் கூட்டிட்டு போகனும்., ப்ளீஸ் விடுங்க சார்..!

நீ என்னப்பா இப்படி உசுர வாங்குற.?

இங்க வா இவங்கள எல்லாம் பாரு, இவங்களுக்கும் தான் வேலை, கடமை எல்லாம் இருக்கு அதுக்காக எல்லோரையும் விட்டுட்டா என் பொழப்பு என்ன ஆகுறது அப்புறம் என்னோட பொண்டாட்டி புள்ளைக எப்படி கஞ்சி குடிக்கிறது.?!

இங்க வந்திட்டா திரும்ப போகவெல்லாம் முடியாது, போய்படு நான் சாப்பிட்டு வரேன்.,

அவன் காலில் சாசங்கமாக விழுந்தபடி எப்படியாவது என்னையும் கூட்டிட்டு போயிடுண்ணே என அழுதான்.

என்னப்பா உன்னோட சங்கட்டமா போச்சு.,

இன்னைக்கு சூப்பர் ஸ்டார் என்ன சொல்வாரோனு ஊரே எதிர்பார்த்திருக்கு அதை போய் பார்க்கலாம்னு பார்த்த விடமாட்டேன்ற..!

சூப்பர் ஸ்டாரா..? என ஆச்சரியமாக கேட்டான்.,

ஆமாப்பா., அந்த ரெண்டுபேர கொன்னதை பத்தி அவரு என்ன சொல்வாருனுதான்.

எந்த ரெண்டு பேருண்ணே..?

சரியாப்போச்சு., உனக்கு நாட்டு நடப்பே தெரியாதா.?

அதான் போலீஸ்காரங்க ஆசனவாய்ல லத்திய வச்சு அடிச்சே கொன்னாங்களே அந்த ரெண்டு பேருக்காகதான்.

ஐயோ., என்ன சொல்றிங்க ஆசனவாயிலா.?

ஆமாப்பா, பாவம் ரத்தம் சொட்ட சொட்ட அடிச்சே கொன்னுபுட்டாங்க..!

கொடூரமா கொலை செய்யுற அளவுக்கு என்ன தப்பு செஞ்சாங்க..?

அறிவிச்ச நேரத்தை மீறி கடைய திறந்து வைச்சாங்கலாம்..?!

சாராயக்கடையாண்ணே..?!

சாராயக்கடையா இருந்தா அரசே பாதுகாப்பு தந்திடுமே..!

போன் கடை தம்பி.,இந்தா கிடக்காங்க பாருங்க.

பெரிய கொடுமையால இருக்கு இது ஒரு குத்தம்னு, கொலையே செஞ்சிருக்காங்க..?

நமக்கு எதுக்கு தம்பி அரசாங்க பொல்லாப்பு..?!

அங்கபாருங்க பாவம் பச்சமண்ண., ஒன்பது வயசுதான் ஆகுது அதை போயி கெடுத்து நாசமாக்கியிருக்காங்க..

எட்டி பார்த்தவன் கொமட்டியவாறு, கொடுமையே பிறப்புறுப்பையே இப்படி சிதைச்சிருக்கங்களே., இவங்களே எல்லாம் சும்மா விடக்கூடாதுண்ணே சுட்டு

கொல்லனும்..!

சத்தமா பேசாதிங்க தம்பி, பெரிய இடத்து சமாச்சாரம் விட்டா இந்த பாப்பாவே அதுவா கீறிக்கிட்டு செத்துபோச்சனு கேஸ முடிச்சுருவாங்க.

என்ன ஜென்மமோ..? பொண்ணா பிறந்தது பாவம்மாண்ணே..?!

இங்கபாரு தம்பி மனுசனா பிறந்ததே பாவம்தான்..!

அஞ்சறிவு ஜீவராசிங்ககூட ஒத்துமையா இருக்கு ஆனா இந்த மனுசப்பயலுக தான் தலைகால் புரியாம ஆடுறான்..!

இந்த பையன பாரு, பாவம் வாழவேண்டிய வயசு சாதிவிட்டு சாதி காதலிச்சானு ஒரே காரணத்திற்காக படுபாவி பயலுக நடுரோட்ல வச்சே வெட்டிபோட்டு போயிட்டானுங்க. இப்படி தெனமும் பலபேர பாத்துகிட்டுதான் இருக்கேன்.

என்னைக்கு அடுத்தவன் பிரச்சனையை தன் பிரச்சனையா நினைச்சு மனுசப்பயலுக குரல் கொடுக்குறானோ அன்னைக்குதான் இந்த சமுதாயம் மனிதர்கள் வாழத்தகுதியானதாக இருக்கும்.

அதவிட்டு பேஸ்புக்ல பதிவு போட்டேன், கண்டனம் தெரிவிச்சேன் இது என் பிரச்சனையில்லை என சாதி, மதம், பணக்காரன், ஏழை அப்டினு பிரிஞ்சு கிடக்கிறவரை சுடுகாடுதான்..!

இதுக்கு மேல எனக்கு முடியாது நான் போய் சாப்பிட்டு சரக்கு வாங்கிட்டு வந்திடுறேன், நீ போய் படு..

அண்ணே என்னை விட்டுடுங்க, இனிமே நான் எல்லோருக்காகவும் குரல் கொடுப்பேன், ப்ளீஸ்., என்னைய விட்டுடுங்க என வேகமாக அறையின் கதவை திறந்து வெளியில் ஓடினான். போன வேகத்தில் கீர்த்தனா கையிலிருந்த காபியை தட்டிவிட்டு தடுமாறி ஓடினான், ஏதும் புரியாமல் அவனையே பார்த்துக்கொண்டு நின்றாள் கீர்த்தனா..!

அன்புடன்,



**கி. எல்லாளன்**
வாலாந்தரவை அஞ்சல்,
இராமநாதபுரம் மாவட்டம்
9952160620

# மனிதம்

தன்னலம் விடுத்து
தன் குடும்பம் தவிர்த்து
தன்னுயிர் துச்சமாய் எண்ணி
மன்னுயிர் காக்க
மரித்த மருத்துவரின்
மரணத்துக்கப்பாலான
மணித்துளிகள் சொல்லாமல்
சொல்லிவிட்டு போகிறது
மாண்டுபோன
மனிதநேயத்தை

---------

நோய்த்தொற்று துதி பாடும்
முகக்கவச தலைவர்கள்
பிணம் தின்று
பணம் பார்க்கும்
தொழில் முதலைகள்
விழிப்புணர்வில்லா
மானுட பதர்கள்
வீழ்ந்துபோன பொருளாதாரம்
வெறிச்சோடிய வீதியில்
கையுரையோ
முகக்கவசமோ இன்றி
குப்பை வண்டியுடன் போகும்
உலக சூழ்ச்சியாறிய
மனிதத்திடம்
மண்டியிட்டது
மரணம்

---------

சேர்த்து வைத்த பணம் பொருள்
கட்டிவைத்த மாட மாளிகைகள்
காத்து வைத்த மத மரபு இறை
உணர்வுகள்
கூடி வாழ்ந்த குடும்ப உறவுகள்
எல்லாம்
ஒற்றை தொற்றிடம் தோற்றுப்போக
மானுடம் காக்க மிஞ்சி நிற்பது மனிதம்
மட்டுமே
மனதில் வை மனிதகுலமே

---------

அனுதினமும் நடந்தேறும் அவலங்கள்
அழுத்தமாக முகத்தில்
அறைந்துசென்றாலும்
மற்ற மானுட உயிர்களை கொன்று
மனித உயிர்கள் பசியாறினாலும்
மனிதநேயம் என்னும் ஒற்றை
நம்பிக்கையிலே
மீண்டும் மீண்டும் கருவறையில்
உருக்கொள்கிறது உலக உயிர்கள்.



**இளவரசி இளங்கோவன்,**
பரவாக்கோட்டை

# இது மட்டும் போதும்....!?

ஒரு பனை மட்டை குடிசை...!!!
உள்ளே வைக்கோல் கரியால்
மெழுகிய மண் தின்னை.....!
அடுப்படியில் இரண்டு சட்டிப்
பானைகள்... !
வீட்டிற்க்கு வெளியே விசுவாசமான
சிகப்பு நாட்டு நாய்.....!

பால் கறக்கும் ஒரு நாட்டு பசுமாடு... !
இரண்டு உழவு மொட்டை மாடுகள்..!?
ஒரு ஏர் கலப்பை...!
ஒரு மண்வெட்டி....!
இரண்டு களை கொட்டு.....!
ஒரு இரும்பு பாரை....!
ஐந்து ஆடுகள்....
ஒரு சேவல்...
பத்து கோழிகள் குஞ்சுகளுடன்...!
இரண்டு ஏக்கர் நிலம்....
அதன் நடுவே கிணறு....!
அதிலொரு மின் மோட்டார்...!

வரப்பை சுற்றிலும்
தென்னை மரங்கள்......!
கிணற்றுக்கு அருகே
ஒரு முருங்கை மரத்தோடு-
ஒரு கருவேப்பிலை மரமும்...!
வாய்க்காலில் பத்து வாழை மரமும்...!

அடுத்து கலத்து மேட்டில் ஒரு
புளியமரம்...!!!
அருகில் ஒரு பலா மரம்....!
குமிட்டி செடியும், பசலிக் கீரையும்
படர்ந்த ஒரு பப்பாளி மரம்...!!!
வயல் வரப்புகளில் வளரும்...
கிடைக்கும் கீரைச்செடிகள்...!

பாத்திரம் கழுவும் இடத்தில் நாலைந்து
மிளகாய் செடிகளும்...!
இரண்டு தக்காளி செடிகளும்....
விளைநிலத்தில் விளையும்
நெல்லும்,சோளமும்,
கடலையும், கேழ்வரகும்...!

இவை மட்டுமே போதும்... ?
யாரையும் எதிர்பாராமல் வாழ...!?



- முனைவர். சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்
மன்னார்குடி

# தீபாவளி

சூரியன் வர்றதுக்கு முன்னாடியே சுழியம் போட்டு முடிக்கனும்.
அண்ணன் சட்டை காலர்ல தெரியாத இடத்துல மஞ்சள் தொட்டு வைக்கனும்.

சீடைக்கும் சீனி உருண்டைக்கும் சீவல வாயிக்கிட்ட பக்குவம் கேட்கனும்.

செவக்காத முறுக்கோட முந்திரி கேக்க வச்சி சமாதானப்படுத்தனும்.
ரவா லட்ட ராத்திரி பிடிக்கனும்.

துரத்திட்டு வர்ற சங்கு சக்கரத்த சத்தம்போட்டே விரட்டனும்.
சுத்தி பத்து பேரு நின்னாலும் அத்த புள்ள பின்னாடி போயிதான் ஒளியனும்!

மதியத்துக்கு அடுப்புல ஆட்டுக்கறி கொழம்பு கொதுச்சு அடங்கனும்.
மதனி கட்டிருக்க சீலைய எந்த சீரியல்ல பார்த்தோம்னு விவாதம் பண்ணனும்.

பக்கத்து வீட்டு சின்ன புள்ள சுடுற டேப்பு துப்பாக்கி சத்தத்துக்கு நெஞ்ச புடிச்சிக்கிட்டு நடிக்கனும்.

மனசு நெறஞ்சு சிரிக்கனும்.

பத்த வைக்காத பட்டாசுக்கு பயந்து ஊதுபத்தியோட உழுந்தெந்துரு

வாங்குன பட்டாசுல பாதிய ஒளிக்கனும் கார்த்திகைக்கும் சேமிக்கனு

--
**மகாலட்சுமி ராமலிங்கம்**

அட்டைப்பட ஓவியம்:
**இரா.மதுவர்சினி,**
சரஸ்வதி வித்யாலயா பள்ளி,
பெருவிடைமருதூர்



# வெளிநாட்டு வாழ்க்கை....

கை நிறைய சம்பளம்
மனம் நிறைய
ஆசைகளோடு
வெளிநாட்டு வாழ்க்கைக்கு
விமானத்தில் அடி வைக்க
கை நிறைய கடனோடு
மனம் நிறைய ஏக்கத்துடன்
தரையிறங்கினோம்..... !!!!

உணவிருக்கும் வேளையில்
நேரமின்றி..!!
நேரமிருக்கும் வேளையில்
பசியும் கூட
மற(ந்)த்து விடும்....!!!

கடவுச் சீட்டு கையில் வந்த
வேளையில் கனவுக் கோட்டையும்
கலைந்து விடும்....!!!!

அழுகையும் அலைபேசியில்... !!!!
சிரிப்புகளும்
அலைபேசியில்....!!!
சோகங்களும்
மரத்து விடும்...!!!!
சிரிப்புகளும்
மறந்து விடும்...!!!!
ஓர் மரப்பொம்மையாய்
மானுட வாழ்க்கை...!!!!

கனவோடும்
ஆசையோடும்
கடலைக் கூட
தாண்டி விட்டோம்
ஆனால் கடனை மட்டும்
தாண்ட முடியவில்லை....
இந்த கற்பனை
வாழ்க்கையிலே....!!!!!!

வெளிநாட்டு சென்று
அன்னைக்கு நகை வாங்கி ...!!
தந்தைக்கு நிலம் வாங்கி...!!!
அக்காவுக்கு மணமுடித்து..!!
தம்பிக்கு கல்வியை தந்து...!!!
கடைசியில் மிஞ்சுவது
கடன் மட்டுமே...!!!!!

வாழ்வை வாழும் வயதில்
பணமெண்ணும் காகிதம் தேடி...!
பணமிருக்கும் வேளையில்
வாழ்வும் மாயமாகி விடும்...!!!



--
ச.அருள் பிரசாத்,
B.COM MDA ICMAI DTL
சிராங்குடி

# அம்மாவும், அப்பாவும்


நகமும் சதையும் போல
நீரும் நிலமும் போல
கோடையும் மழையும் போல
அந்தியும் சந்தியும் போல
இன்பமும் துன்பமும் போல
இறப்பும் பிறப்பும் போல தான்
தாயும் தந்தையும்
ஒன்றைவிட்டு ஒன்று இருப்பின்
வாழ்க்கை சிறக்காது
பத்து நிமிடம் உன்னால்
பளு சுமக்க இயலாது ஆனால்
பத்துமாதம் அலட்டாமல்
உன்னை சுமப்பவள் உன் தாயடா
உன்னை பெற்ற களிப்பை
மனதில் கொண்டு தோளில் சுமந்து வாகாய் வலம் வரும் மழலையடா
மீசை வைத்த இன்னொரு
மழலையடா உன் அப்பா..
இரட்டைகிளவியாய்
இணைந்தே இருந்து
உன் வாழ்விற்கு உயிர் கொடுக்கும்
வரமடா அம்மாவும் அப்பாவும் ..

## மெகர்பான் இப்ராஹிம்,
கரிசவயல்.

நானில்லாத உலகம்
எப்படி இருக்குமென்று
அமாவாசையன்று ஒத்திகை
பார்க்கிறது நிலா.

**ஆனந்தன்,**
திருப்பூர்

# மறவா வருடம் 2020



மூ. இராமலெட்சுமி,
இடைநிலை ஆசிரியர்,
சிவகங்கை மாவட்டம்

பாதுகாப்பின்றி பெண்
மக்களும்....
கொரோனாத்தொற்றில்
உயிர்களும்....
நீட் தேர்வில் சிக்கிய
மாணவர்களும்.....
தங்கத்தின் விலையில்
மயங்கியவர்களும்...
முடங்கிய வாழ்வில் முழி
பிதுங்கியவர்களும்..
ஆன்லைன் வகுப்பை வெறுக்கும்
செல்வங்களும்...
வெளி நாட்டில் தவித்த நமது
வாசிகளும்....
வெள்ளத்தில் தம்பித்துப்போன
ஹைதராபாத்வர்களும்....

கொரோனாவில் முடிந்த மலிவான திருமணங்களும்...
தேர்வின்றி தேர்ச்சி பெற்ற மகிழ்வானவர்களும்....
காலமாய் ஓடியவர்கள் வீட்டில் ஓய்வு பெற்றவர்களும்.....
குடும்பத்துடன் நேரத்தை செலவு செய்த குடும்ப தலைவர்களும்....

இழந்தது ஏராளம், இயலாமையும் இருந்தது,
வறுமையில் கொடுமை,
உயிர் சேதங்களும், வலிகளின் ஆழம் .

நிரந்தரமில்லா இவ்வுலக வாழ்வில் நிலையானது எதுவும் இல்லை என பாடம்
காற்றோம் இரக்கத்தோடு வாழ்வோம் வீழ்வோம் ... !!!!

சோதனையும் ஓர் நலனே என்று இத்தனையும் கடந்தே ஒன்றாக சென்று விடுவோம்
ஓர் நன்நடையிலே..... !!!

இனி வரும் காலங்கள் இனிதாக அமைய எண்ணி காத்திருப்போம் இறைவனை,
வேண்டி பார்த்திருப்போம் எல்லாம் நலனுக்கே ....... !!!

சிறுகவி மு.மாஜிதா, சென்னை

# நேற்று இரவு பெய்த மழையிடம்

உனக்குப் பயமாக இல்லையா
என கேட்டேன்
ஏன் என்றது மழை
ஆயிரம் வோல்ட் மின்னல்
ஒளிக்கீற்றில் என்ன ஆனாய்!
பெருத்த சப்தங்களின்
இடி முழக்கத்தில்
எங்கு நின்றிருந்தாய் என்றேன்

மண்ணுக்குள் ஒளிந்துகொண்டேன்
பெருவெளியின் ரகசியத்தை
தேடத்தான் புறப்பட்டேன்
பூமி வந்து சேர்ந்தேன்
இங்கு தான் ரகசியம்
தேடப்பட்டுக்கொண்டேயிருக்கிறது

அதோ தீப்பற்றி எரியும்
மரத்தைப் பாருங்கள்
அதோ இடிந்து வீழ்ந்த
வீட்டைப் பாருங்கள்
மின்னலும்
இடியின் அதிர்வுகளும்
கர்ஜித்து மறைந்துபோயின
நிலத்தில் வடுக்களை விட்டு

துளிர்க்கும் மரத்தில்
சிரிக்கும் மழை
என்றுமே நம்
நுரையீரலின் வடுக்கள்
சேறாகி விடுவேன் என
பூமிக்கு வர
தயங்கியதும் இல்லை
அர்த்தமுள்ள வேர்களின்
ரகசியத்தில் கலந்துதான்
இருக்கிறேன் என்றது மழை
நாம் தான் வேர்களை
மறந்துவிடுகிறோம்.

------

அழகான கரும்பாம்பு
மாட்டிக்கொண்டது அடித்துவிட்டார்கள்
அர்த்தமுள்ள புத்தகத்தைக் கிழித்து
எரித்தும் விட்டார்கள்
வயதான மனிதனின்
கைகளைப் பற்றும் பொழுது
பிரித்துவிட்டார்கள்
தனிமையைத் தேடும்பொழுது
கூச்சலிட்டார்கள்
புறப்பட்டுச் செல்லும் வழியில்
தென்பட்ட புத்தாவை
ஆசையாய் அழைத்தார்கள்
நிராகரித்தான் புத்தன்

கரும் பாம்பு
புத்தகம்
முதியவர்
புத்தன் அமர்ந்த கரும் பாறை
என அவன் பார்வை பட்ட
இடங்கள் எல்லாம்
மலர்ந்தது

ஒவ்வொரு மனிதனும்
ஒரு தீவுகளாய்
தேனீக்களாய் மாறி
மலர்களைப் பலியிட
கடுவெளியில் சிரித்து
பறக்கிறது பூக்கள்
தீவில் இருக்கும்
மூங்கில் வனம் இசைக்காமலேயே
எரிந்துவிடுகிறது.

-------

வெளியே சென்று
வீட்டை அடைந்து
வெளிக்கதவின்
பூட்டை திறந்தேன்
சட்டென சில பாத்திரங்கள்
சப்தத்தோடு வீழ்ந்துவிட
பயம் எனக்கு
உள்ளே செல்லாமல் கதவருகே
நின்றிருந்தேன்
குறு குறு பார்வையோடு
மஞ்சள் நிறப்பூனை
எதிரில் நின்று
என்னையே முறைத்துப் பார்த்தது
அதற்குப் பின்னால் அழகான
கறுப்பு நிற பூனையும்
மஞ்சள் பூனையை உரசியவாறே
ஒரு கணம் பார்த்தது
நான் கதவு திறக்க தாமதிக்காமல்
சீக்கிரமாகத் திறந்த
கோபம் அந்த பூனைக்கு
என் கையிலிருந்த
பால் பாக்கட்டைப் பார்த்தவாறே
சட்னெ கடக்க முயன்ற
மஞ்சள் நிற பூனைக்குப் பின்
எலியாய் துரத்தியது என் கால்கள்
பால் சொம்பை
உருட்டியதற்காக இல்லை.

-------

சிறுவயதில் கூத்து அனுபவங்களை
ரசித்தது உண்டு
இலக்கணம் மறந்து
கம்பனுக்குத் திகட்டும் வகையில்
வாய்ப்பாட்டு பாடுவார்கள்

சீதை சிகெரெட் புகைத்துவிட்டு
சட்டென அவள்
காட்சிக்கு வாதாடுவாள்

இராவணன்
பொம்மை தலைகளைக் கழட்டிவிட்டு
டீ குடிப்பார்

ராமன் மீன் குழம்பு சாப்பிட்டுவிட்டு
ஓடிவருவார்

அனுமன் மட்டும் வாலோடு
அமர்ந்து
ராமனைச் சுமந்திருப்பான்

தன் மார்பைப் பிளந்த
அனுமனின் இதயத்தில்
பசி பசி என அடித்தது
இதயம்

இன்றைய இரவு கூத்தாடும்
கலைஞர்களுக்குப் பசியால்
துடிக்கிறது இதயம்

வீடு வாயில் தோறும் ராமா ராமா
எனப் பாடிவருகிறார் அனுமன்
எந்த வீட்டிலும்
ராமனைக்காணவில்லை.



- ப.தனஞ்ஜெயன்
danadjeane1979@gmail.com
9751800333

# ......தேசம்......

இனியும் சகித்து
போக மாட்டோம்...
எம் சகோதரன் பனிக்கட்டியில்
உயிரற்று உறைந்து போவதை.....
இனியும் சகித்து போக மாட்டோம்...
எம் தேச கீதம் ஒப்பாரியாய்
ஓசையிடுவதை.....
இனியும் சகித்து போக மாட்டோம்...
எம் தேச கொடி பாதியில்
பறக்க விடுவதை.....
இனியும் சகித்து போக மாட்டோம்...
அகிம்சை எனும்
வெள்ளாயுதம் ஏந்தியதால்
எம்மண்ணில் வீரனொருவன்
மார்பில் குண்டேந்தி
வீழ்வதை.....
இனியும் சகித்து போக மாட்டோம்....
உம் நாய்கள் கடித்து
எம் குருதி வீழ்வதை.....
பாரத தாயின் துயர் துடைக்க யாம்
நினைத்தால் ஆகாய விண்மீன்களை உதிர்த்து
பரிசளிப்போம்.....
உம் போன்ற ஈன பிறவி கொண்ட
எதிரியையும் துரோகியையும்
தோட்டா முனையில்
துடைத்தெறிய பொழுதாகாது.....
சாது மிரண்டால் காடு கொள்ளாது,
வீறு கொள் வீரனே
பகை முடிக்க....
அகிம்சை எனும் பலகையை
கொளுத்தி விடு.....
புதுப்பெயரிடு
பாரதம் மீண்டு(ம்) மிளிரட்டும்.....



அன்புடன்,
S.S.கார்த்திக், DCA, DME
உள்ளிக்கோட்டை.




ரோஸி (ஆசிரியை)



தனலெட்சுமி

# என்னால் பேசலாகாது

உடம்பெல்லாம் கூசுகிறது.
என்னை மொய்க்கும்
ஈக்களிடம் சொல்லிடுங்கள்.
நான் பலகாரமல்ல எதற்கும்
உதவாத ''பிணம்'' என்று...!

------
உன்னைக் காணாமல்
போயிருந்தால்; இப்பிறவியில்
என்னைக் காணாமலே
போயிருக்கும்; காதல்.

3.
என்னைக் காயங்களால்
செய்திருக்கிறேன்.
நீங்களென்னைக் காண வரும்
வேளையில்...
களிம்போடு வருவீர்களென்ற
நம்பிக்கையில்.

4.
அந்த ஒற்றையடிப் பாதையில்
மற்றவர்களின்
அவசரத்தைப் பொருட்படுத்தாத
சிறு நத்தை
எவ்வித உயிர்ச் சேதமின்றி
இந்த அரை மணி
நேரப் பொழுதில்...
நல்லபடியாகக் கடந்து
பயணித்திருக்க வேண்டும்.

5.
நான் அப்போது குளத்தில்
சிறுதவளையாய் இருந்தேன்.
அதன்பின் வானத்தில்
சிலகாலம் பறவையாய்
என் பொழுதைக் கழித்தேன்.
பிறகு வனத்தில் கொஞ்ச காலம்
விலங்காய்ச் சுற்றினேன்.
பின்வரும் நாளில் மானிடனிடம்
அவன் கை உபகரணமாய்
அங்குமிங்கும் அலைந்தேன்.
அதன் பின்வந்த நாளில்
சிறு குப்பைமேட்டில் செடியானேன்.
இடி மின்னல் மழை காற்றென
அனைத்தையும் எதிர்க் கொண்டு
பெரும் போராட்டத்திற்குப் பின்பு
சில காலம் மரமாகி வாழ்ந்தேன்.
நான் இருந்ததிலும் கழித்ததிலும்
மரமாய் வாழ்ந்த தன்னலமற்ற
வாழ்வுதான்
வரமாய் அமைந்ததெனக்கு.



- உணர்வும் ஆக்கமும்...
**பாரியன்பன் நாகராஜன்,**
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353

# ஓர் புலனத்தின் சலனம்

''ஆருயிர் உடன்பிறப்பே'' என
ஆரம்பித்து
அடுக்கடுக்கான
ஆசை வார்த்தைகளால்
அண்ணனின் பிறந்த நாளை
அலங்கரித்தான்
அடுத்த அறையில் படுத்துக்
கொண்டிருந்த
அன்புத்தம்பி.

ஆதவன் வரும் முன்னே
அதிகாலைத் துயிலெழுந்து
ஆரவாரமேயில்லாமல்
அத்தனை வேலைகளையும்
அயற்சியின்றி முடித்து
அன்பே சாப்பிட வா என
தலையைக் கவிழ்த்தி
புலனத்தில் புதைந்திருந்த தன்
தவப்புதல்வனை
கூவிக்கூவி கூப்பிட்டுக்
கொண்டிருந்தாள்
அம்மா.

பக்கத்து ஊர்க்காரரின்
பிண ஊர்வலத்தில்
பங்கு எடுத்து திரும்பிய அப்பா
அந்நிகழ்வைப் பகிர,
நான் பகிரியில் இரங்கலை பகிர்ந்தேன்.
என் நண்பனின் அப்பாதான் என
பாசத்தை நெகிழ்ந்தான்
அந்த நண்பனின் தோழன்.

பக்கத்து தேசத்தில்
பணம் ஈட்டி கொண்டிருந்தவனுக்கு
பற்பல சம்பிரதாயங்களுடன்
பளபளப்பான திரையில்
பகிரியின் நேரலையில் மணமுடித்து
பாலும் பழமும்
பகிர்ந்த தருணத்தில்
பல்லை இளித்துக் கொண்டு இருந்தான்
அந்தப் பணக்கார மணமகன்.

கொரோனாவின்
கோரப்பிடியில் சிக்கி
பதினான்கு நாட்கள்
தனிமைப்படுத்தப்பட்டு,
தன் தந்தையின் ஈமச்சடங்கை
ஊர் நலன் கருதி
பகிரியின் நேரலையிலாவது
பார்த்தோமென சாந்தமடைந்தான்
சிநேகம் மிகுந்த மகன்.

கடுதாசி அனுப்பி
கருத்துப்பரிமாற்றம் செய்ததையும்
காலச்சக்கரத்தினால் அது
வழக்கிலிருந்து போன
அவலத்தையும்,
மேற்சொன்ன புலனத்தின்
சலனத்தையும்,
சலனமே இல்லாமல்
புலனத்தின் வழியே
இதழுக்காக எழுதிக் கொண்டிருந்தான்
இரு முகம் கொண்ட ஒருவன்.



நேசமுடன்,
**சுப்பையா கபிலன்**
வடுவூர்.

# பாட்டி அம்மாவின் பெருமைகள்

பேரன் பேத்தியை குளிக்க வைத்து
பேரின்ப மழையில் நனைந்து

பேசும் தெய்வமாய் மாறி
பேசுவதற்கு கற்றுத்தந்து

மழலைச் சொல்லில் மயங்கி
மன மகிழ்ச்சியில் திளைத்து

பிள்ளைகளின் பிள்ளைகளை சுமந்து
பிறவிப் பலனை அடைந்து வரும்
பாட்டி சொல்லை தட்டாதே
பாதை மாறி போகாதே

பாட்டி வைத்தியம் கற்றுக்கொள்
பழங்கதைகளை தெரிந்துகொள்

கூட்டுக் குடும்பமாய் வாழப் பழகிடு
கூடி ஆடி மகிழ்ந்திரு

கதைகள் பல கேட்டுக் கொள்
கைப் பக்குவத்தை அறிந்து கொள்

------

## வீரப்பெண்களே...

வீர பெண்களே
விளையாட மறந்து

விதியை நினைத்து
வருந்துவது ஏனோ...?!

அகிலத்தை
ஆளப்பிறந்தவளே
அழுவது தகுமோ..?!

பெண்அடிமை விலங்கை
உடைக்க வேண்டாமோ...?!

பூவாய் மணம் வீசியது போதும்
புயலாய் மாறிடு

புது உலகம் படைத்திடு
புதுமைப்பெண் என நிரூபித்திடு

தலைநிமிர்ந்து தரணியில்
ஓங்கி உயர்ந்திடு

சோதனைகளை எதிர்கொண்டு வாழ்ந்து
பார்த்திடு

உன் கவலைகளை
கடல்கடந்து கடத்திடு

சந்தோஷத்தையும் உனக்கு
சாமரம் வீச செய்திடு

சாதிக்கப் பிறந்த
சாதனை பெண்ணாய்
சாதித்துக் காட்டிடு0

------

## வண்ணக் கொடிகள்

வண்ணத்தால் கொடிகள்
வேறு படட்டும்

எண்ணத்தால் ஒன்றுபடுவோம்

செயலால் செய்து முடிப்போம்

வண்ணக் கொடிகளின் மூலம்
வறுமையின் நிறம் நீங்கிடும்

வாழ்க்கைத்தரம் உயரட்டும்
வரதட்சணை கொடுமைகள்
ஒழியட்டும்
முதிர்கன்னிகள் வாழட்டும்
வனங்கள் அழியா காக்கட்டும்
வான் மழை பொழியட்டும்
வளம் கொழிக்கட்டும்
விவசாயம் மறுமலர்ச்சி அடையட்டும்
மக்களின் மனம் குளிரட்டும்
வல்லரசு நாடாக மாறட்டும்

------

## உழைப்பாளிகளின் நிலைப்பாடு

உழைத்துத் தேய்ந்த தேகங்களே
உதிரம் சிந்தும் உழைப்பாளிகளே

உலகில் உயர்ந்த நிலை
உனக்கு கிடைக்கவில்லையோ ..?!

உன் உள்ளம்
உல்லாச நிலையை
அடையவில்லையோ ..?!

உருண்டை சோறு
உணவாக கிடைக்கவில்லையோ..?!

உனக்காக உருகும்
உள்ளம் இன்னும் பிறக்கவில்லையோ
..?!

உழைப்புக்கேற்ற
ஊதியம் கிடைக்க வில்லையோ..?!

உன்னைப் படைத்தவன்
உன் பக்கம் இல்லையோ..?!

------

## உழவனின் உழைப்பு

உழவன் உழைப்பு என்னும்
உளி கொண்டு

மண்ணில் மன வலிமையோடு
நிலமகள் துணையோடு நிற்க

வருணன் விண்ணை
இடித்து மழை தர

சுற்றம் சுகம் பெற நிலமகள்
பச்சை நிற ஓவியமாய் மாற

தாழ்ந்தோனாய் தரணியை வலம்வரும்
உழவன் உலகைக் காக்க

பச்சை நிறப் பட்டுஉடுத்திய
நில மகளுக்கு நீர்பாய்ச்ச

உலக உயிர்கள் பசியாற
உணவை உருவாக்க

வரிசைகட்டி வணிகர்
விளைச்சலை விலை பேச

உழவன் உழைப்பால் உயர தலைமைப்
பொறுப்பேற்க

தங்கநிற நெல்மணிகளை
வரியவனுக்கு வாரி வழங்க

திக்கற்றவனுக்கு திசைகள் கிடைக்க

பசித்துன்பம் பறந்து போக வயல்வெளியில் வசந்த காற்றை சுவாசிக்க

மாலைப்பொழுதில் சோலைக்குயில் குரல் கேட்க

கருமேகங்கள் சூழ மயில் தோகை விரிக்க

மழை வரக் கண்ட உழவன்
மனம் மகிழ்ந்தானோ ..?!
மண்ணில் பிறந்த பயன் அடைந்தானோ..?!

--



கவிதாயினி
**சை. சபிதா பானு,**
காரைக்குடி

# மனிதம்

நகர நெரிசலில் தொலைத்த பணப்பையுடன்,
கனத்த மனநிலையில் திக்கற்று நிற்கையில்,
கைநிறைய சில்லறையை திணித்து போன
‘‘நடைபாதை யாசகனின் மனிதம்‘‘..!
ஏதோ ஒரு முறை பசி எனக்கேட்ட முதியவரிடம்
குரூரப் பார்வை பார்த்துச்சென்ற நாட்கள்
இன்றைய நொடிகளை குற்ற உணர்வில்
கூனிக்குறுகி ஏறிட்டு கடந்தது..!

**- கவிமலர் சரண்யா.த**
கருமண், கொழிஞ்சாம்பாறை,
பாலக்காடு மாவட்டம்.

# நிறைவேறா

ஆசைகளுடன்
உலா வருகின்றன...
மனிதர்களால் கொல்லப்பட்ட
மரங்களின் ஆன்மா!
------

தடுமாறுகின்றன...
அப்பாவின் கல்லறை
கடக்கும் பாதங்கள்!
------

இறந்த நண்பனின்
குழந்தைகளைப்
பார்க்க செல்லும்
நேரங்களிலெல்லாம் சாக்லெட்களோடு
கண்ணீரையும் அளித்து
வீடு திரும்புகிறது ...மனது!
------

எல்லோரும் உறங்கிவிட்டார்கள்...
நான் மட்டும்
விழித்திக் கொண்டிருக்கிறேன்...
கவிதையொன்றை
சுமந்த படி உறங்குவதொன்றும்
அத்தனை சுலபமில்லை...
------

அனல் பறக்கிறது...
பசியோடு
சாலையைக் கடப்பவனின்
கண்கள்!
------

சிறு
காற்றுபட்டாலே
உடைந்து போகும்
நீர்க்குமிழி நான்,
பெரும் புயலாய் உன் மௌனம்!
------

கோவிலுக்குள்
நுழைவதற்குள் வரம்
கிடைத்துவிடுகிறது..
வாசலில்
புன்னகைத்தபடி குழந்தை!
------

குழந்தைகள்
விளையாடி மகிழ்ந்த
வீட்டை பாகப்பிரிவினை
செய்து
கொண்டிருக்கும் போது,
வெளியே பெய்து கொண்டிருக்கும்
மழை,
கடவுள் சிந்திய கண்ணீராகவும்
இருக்கலாம்!
------

இரவு பொழுதொன்றில்
மின்சாரம்
துண்டிக்கப்பட்டும்
சலனம் எதுவுமின்றி
சாலையொன்றை கடந்து போகும்
பார்வையற்றவனின்
மனதை ஒத்திருக்கிறது...
உன்னை பிரிந்த பிறகு
நிகழும் ஒவ்வொரு பயணமும்!
------

சிலுவை பற்றிய கவிதை
ஒன்றில்
அறையப்பட்டுக் கொண்டிருக்கிறேன்...
எழுதி முடித்ததும்
நான் தேவனாகலாம்!



மு.முபாரக்

# சாக்ரடீஸ் மண்ணில் புதைக்கப்படவில்லை விதைக்கப்பட்டு இருக்கிறார்!

ஏதென்ஸ் நகர வீதிகளில் அலைந்து திரியும் இளைஞர்களே. வாழ்க்கையை பொய்யிலும், புரட்டிலும் அற்ப காரியங்களுக்காகவும் செலவழித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு நான் சொல்ல வேண்டியது ஒன்று உள்ளது. உன்னையே நீ அறிவாய். நீங்கள் உள்ளுக்குள் புதையலைச் சுமந்து கொண்டு பிச்சைக்காரர்களைப் போல் அலைகின்றீர்கள். வாலிபம் என்பது வாழ்க்கையின் வசந்தகாலம், வலைவீசும் வனிதையரின் கடைக்கண் பார்வைக்காக இதயத்தைப் பறிகொடுத்துவிட்டு உங்கள் முகவரியை தொலைத்துவிடாதீர்கள். வாழ்க்கை யாருக்கும் தலைவாழை இலை போட்டு விருந்து வைக்காது, தூங்கிக் கொண்டிருப்பவனை தட்டி எழுப்பி புதையல் இருக்கும் பாதாள அறையின் சாவியைக் கொடுக்காது. பஞ்சுமெத்தையில் பரத்தையர்களோடு பேரின்பத்தில் மூழ்கி திளைத்து கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று அவர்களின் காலடியில் அடிமைப்பட்டு கிடக்கும் உங்களுக்கு எனது வார்த்தை எனும் வாள் மூலம் காயத்தை ஏற்படுத்துகிறேன் விழித்துக் கொள்ளுங்கள் உறங்குவதற்கான நேரமில்லை இது.

இளைஞர்களே சுதந்திர வானில் சிறகடித்துப் பறப்பதைவிட்டுவிட்டு இரண்டு நெல்மணிக்காக கிளிகளைப் போல கூண்டுக்குள் அடிமைப்பட்டு கிடக்கலாமா? மக்களை ஆளுபவர்களின் உண்மையான முகம் உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் அவர்களின் முகமூடியைத்தான் பார்க்கின்றீர்கள். நீதிமான்கள் என்று உங்களால் தொழப்படுபவர்கள் கூட தங்கள் சொந்த வாழ்க்கையில் மிருகங்களைவிட கேவலமான நடத்தை கொண்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். பலியாடுகள் அறியாது தாங்கள் எதற்காக பலி கொடுக்கப்படுகிறோம் என்று. ஆட்டுமந்தையாய் இருக்கும் வரை அடிமைப்பட்டுத்தான் கிடக்க வேண்டும். கடவுள் பெயரால் கையில் விலங்கிடப்பட்டிருக்கும் உங்களுக்கு நான் விடுதலை அளிக்கிறேன்.

இளைஞர்களே நீங்கள் கங்குகள் நான் தீ வைக்கிறேன் பற்றி எரியட்டும் கிரேக்கம். கடவுள் பெயரால் நடக்கும் பித்தலாட்டத்தை எதிர்த்து எதிர்ப்புக் குரல் எழுப்பாமல் எத்தனை நாட்கள் ஊமைகளாய் காலத்தைக் கடத்துவீர்கள். உங்களைப் பாவிகள் என்றழைக்கும் கூட்டம் திரைமறைவில் என்னென்ன லீலைகள் செய்கின்றார்கள் என உங்களுக்குத் தெரியுமா? தனது பலம் என்ன என்று தெரியாதவரை தான் யானையை அங்குசத்தால் பணியவைக்க முடியும். பேரலை என்பது பல சிறியஅலைகள் ஒன்று சேர்ந்தது என இந்நாட்டு வேந்தன் அறிந்து கொள்ளட்டும்.

மெலிட்டஸ் கூட்டத்தைப் பார்த்தாயா அதில் அரசை எதிர்த்து கிளர்ச்சி செய்யத் தூண்டும் வகையில் கயவன் சாக்ரடீஸ் பேசுவதைக் கேட்டாயா? எதிரிகளை இனம்

கண்டுவிடலாம். இவன் போன்ற துரோகிகளிடம் தான் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். காவலர்களே புரட்சியைத் தூண்டியதற்காக சாக்ரடீஸை கைது செய்து நீதிமன்றத்துக்கு அழைத்து வாருங்கள். சாட்சிக் கூண்டில் நிற்கும் சாக்ரடீஸிடம் நீதிபதி அவருடைய பேச்சுக்கு விளக்கம் கேட்கிறார்.

சாக்ரடீஸ் உன் பேச்சுக்கள் இளைஞர்களை அரசுக்கு எதிராக தூண்டிவிடும்படியாக இருக்கிறது என்று குற்றம்சாட்டப்பட்டு இருக்கிறது. இதற்கு என்ன பதில் தரப்போகிறாய்?

ஓ! நாட்டை வெல்பவனைவிட தன்னை வெல்பவனே அரசன் என நான் கூறியது தவறா? நெஞ்சுரத்திடம் கையை உயர்த்துவதும், தாழ்பணிந்து கைகட்டி நிற்பதும் உன் கையில் தான் இருக்கிறது என இளைஞர்களை தட்டி எழுப்பியது என் தவறா?

வாழ்க்கை ருசிப்பதிலும், கேளிக்கைகளிலும், விளையாட்டிலும் வீணாக ஈடுபட்டு பொழுதைக் கழிப்பதற்காக அல்ல, அடுத்த தலைமுறை சுதந்திர காற்றை சுவாசிக்க நீ உன் இன்னுயிரைத் தியாகம் செய்ய வேண்டும். விருட்சம் கிளைபரப்ப நீ மண்ணுள் வேராக இருக்க வேண்டும் என நான் அவர்களுக்கு எடுத்துரைத்ததில் என்ன தவறு கண்டீர்? விடுதலைக்கான திசையை சுட்டிக் காட்டியதற்காக குற்றம் இழைத்ததாக என் ஆட்காட்டி விரலை வெட்டி விடுவீர்களா இதுதான் கிரேக்க நாட்டு நீதியா? பல்லக்கு சுமப்பவன் அமர்ந்து வருபவனிடம் உனக்குதான் கால்கள் இருக்கிறதே எனக் கேட்டால் அவன் கிளர்ச்சியாளன் ஆகிவிடுவானா? அடிமைத்தனத்திற்கு எதிராக போராடி மரணத்தை முத்தமிட்ட போராளி இவன் என்று நாளைய வரலாறு உன்னைப் பற்றிக் கூறும் என நான் கூறியதில் என்ன தவறு கண்டீர்? நீங்கள் எண்ணியதை தான் நான் பேச வேண்டுமென்றால் அதற்கு சாக்ரடீஸ் எதற்கு?

பார்த்தீர்களா நீதியரசர் முன்னிலையிலேயே தன் வார்த்தைகளுக்கு என்ன வியாக்கியானம் அளிக்கிறான் என்று. நயவஞ்சகன், துரோகி, உண்ட வீட்டுக்கு ரெண்டகம் நினைப்பவன் பாம்பின் விஷத்தைவிடக் கொடியது இவன் வாயிலிருந்து புறப்பட்டு வரும் வார்த்தைகள். இவனை பேசவிட்டால் நீதியரசரையே தன் வார்த்தை ஜாலத்தால் மயக்கிவிடுவான். விரைவாக தீர்ப்பளியுங்கள் என்று சபையோர் சார்பாக வேண்டுகிறேன்.

தேசவிரோத காரியங்களில் ஈடுபட்டது சாட்சியின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டதால் சாக்ரடீஸுக்கு மரணதண்டனை விதிக்கிறது இந்த நீதிமன்றம்.

இன்று நான் விஷமருந்த வேண்டும். வாழ்வு மகளை விட்டுவிட்டு மரணதேவதையை ஆரத்தழுவிக் கொள்ள வேண்டும். எனக்கு இன்னொரு வாசல் திறந்துவிட்டது. பிறக்கும்போது அழுது கொண்டே பிறந்திருக்கலாம் இறக்கும் போது நான் அழ விரும்பவில்லை. மரணத்தைக்கூட வீரத்துடன் எதிர்கொண்டான் சாக்ரடீஸ் என்றுதான்

வரலாறு சொல்ல வேண்டும். நான் ஒன்றும் கொலைகாரனல்ல சத்தியத்தின் பக்கம் நிற்பதால் சாவை எதிர்கொள்ளவிருக்கும் தியாகி நான். மதகுருமார்கள் என்னைப் பேசவிட்டால் எங்கே தங்களது ஆட்டம் நின்றுவிடுமோ என அச்சப்பட்டு தான் என்னை கொல்லத் துணிந்திருக்கிறார்கள்.

எனது மரணத்தின்போது அரசனின் கையிலுள்ள செங்கோல் நியாயத்தை சீர் தூக்கிப் பார்க்கவில்லை என்பது உண்மையாகிவிடும். அரசே நீ என்னை வேருடன் சாய்த்துவிடலாம். நான் விதைத்த விதையை தேடிப் பிடித்து உன்னால் அழிக்க முடியாது. அரசனே நான் புதைக்கப்படவில்லை விதைக்கப்பட்டிருக்கிறேன் என்று ஒருநாள் நீ உணர்ந்து கொள்வாய். இது எனது அந்திமகாலம் இந்த அறிவுசூரியன் இல்லாமல் உலகில் அறியாமை இருள் அகலாது. ஞானத்தை விலைபேசி நான் விற்கவில்லை.

அடிமைப்பட்டிருக்கும் நாட்டிலெ`லாம் இந்த சாக்ரடீஸ் தோன்றுவான் ஆள்வோருக்கு எதிராக அறிவாயுதத்தை உபயோகிப்பான். நான் இந்த உலகத்திற்கு கொடுத்துப் போகும் பகுத்தறிவால் எத்தனை சாம்ராஜ்யங்கள் வீழப் போகுது பாருங்கள். இதோ என்னைக் கொல்ல விஷம் வந்துவிட்டது. மரணத்தை சற்று தள்ளிப்போடும் ஆசை எனக்கில்லை இப்பொழுதே அருந்துகிறேன்.

எனது கல்லறையில் எழுதி வையுங்கள் பலரை விழிக்கச் செய்தவதன் இங்கு ஓய்வெடுக்கிறான் என்று. நான் இறந்து போகலாம் பலநூறு ஆண்டுகள் நான் ஏற்றி வைத்த நெருப்பு எரிந்து கொண்டிருக்கும். வாதத்தை வாதத்தால் வெல்ல முடியாத கோழைகள் சாம்ராஜ்யம் ஞானத்தீயால் விரைவில் சாம்பலாகும்.

**ப.மதியழகன்,**
115,வள்ளலார் சாலை,
ஆர்.பி.சிவம் நகர்,
மன்னார்குடி - 614001.
திருவாரூர் மாவட்டம்.
ஞிறுடுடு:9597332952
ஙிடச்ஞண்சணீணீ: 9384251845

# கவிதை துணுக்கு

அவள்
கவனமாக கவனிக்காமல் கடந்து
சென்றாள்!
கவனம் என் மீது உள்ளதை
கண்டுகொண்டேன்.

பருவம்
பருக்கள் எத்தனை அழகு?
அவள் முகத்தில்!
மழைத்துளி முத்தமிட்டு நின்றது!!

கவிதை
அவள் நடையில் பின் இடையில்
அப்புறமும் இப்புறமும் குதிபோடும்!
சடையின் பின்னலை என்ன சொல்ல!
இடையின் வடிவினை என்ன சொல்ல!

அவனும்
அவள் தட்ட தட்ட தட்டச்சில்!
தமிழும் தலை அசைக்கிறது.
அதில் விழுந்தது எழுத்துக்கள்
மட்டுமல்ல!!

ஏக்கம்
ஆயிரம் வார்த்தைகளை வீசுதடி உன்
விழிகள்!
அதில் ஓரிரு வார்த்தையாவது!!
உதடுகள் பேசுமா..?? என்னிடம்.

மை தேவையில்லை
இதழ் என்னும் எழுதுகோல் கொண்டு
உடல் என்னும் காகிதத்தில்
வடித்துவிடவா..??

பித்து
வெயில் அடிக்கும் போது சம்மந்தமே
இல்லாமல் வரும் மழையை
போலத்தான்! இந்த காதலும்!!



பேரன்புடன்,
மனோ குணசேகரன்,
புள்ளவராயன் குடிக்காடு.




Y. யாஷினி,
3ஆம் வகுப்பு
ஜெடெக் பள்ளி
கம்பம்

# செக்கச்சிவந்து நீ!

★
இணைந்து வாழ்தல்
பொய்மையாய் கூட
வாய்க்காத பெருந்துயர நிலையில்
உன் விழிகளின் அருவியில்
தலைகீழாய் வீழ்ந்து
உயிருடைந்து சிதைந்ததைச்
செவிவழிச் செய்தியாயும்
நீ அறிந்திடல்
வாய்ப்பில்லை தானே ?

★
ஏதும் பேசாமல்
நரக நாழிகைகளை
வேடிக்கையாய் தோற்றி
மெல்ல நகர்கிற உன் வினோதம்
கொதிநீரில் தோய்த்து
என் இதயச் சாற்றினைச்
சிறுகப் பருகிடும்
ஆனந்தமாய் இருக்காதுதானே
உனக்கு ?

★
நீ எளிதாய் வெட்டியெறிந்த
நம் காதலின்
மெல்லிய இதயத்தைக்
குரங்கின் மகவென
முதுகிலும் மடியிலும் மார்பிலும்
சுமந்து அலைகிறேன்
தலைக்குமேல் பறந்து
ஓலமிட்டுத் தொடர்கிறது
என்னைப் போன்றதொரு
தனித்த வானம்பாடி!

★
மருதாணி
வைத்துக்கொள்ளப்போவதாய்
காதல்மிகுத்துக் குழைந்தாய்
இன்று நீயென் அருகில்!
என் முத்தங்களைவிடவா
மருதாணி உன்னைச்
சிவக்க வைத்துவிடுமென்று
உன் கைவிரல் கோர்த்தேன்
கொஞ்சலாய்
வெட்கத்தில் செம்பருத்தித்
தோட்டமானாய்
உடலெங்கும் செக்கச்சிவந்து நீ !

★
நெடுநாளாய்
உன்னை விலகியிருக்கும்
தனிமையின் சமாதியில்
வலியொளிரும் மெழுகாய்
உருகி மாய்கிறேன் நான்
நீயில்லாக் கடற்கரை மணலைக்
கனல்நுரைத்த அலைகளின் நாவினால்
மொத்தமும் எரித்துப்
புணர்ந்ததின் சாம்பலை
வீசியெறிகிறேன்
பெருங்கடலெங்கும்
செத்துமிதக்கின்றன
உன் இதழ்வனத்தின்
மலர்தரித்த சிசுக்கள் மொத்தம்!

★
இரவுபகல் எந்நேரமும்
அடங்காமல் வாயாடுகிறாய்
இதயத்தின் சுவரெலாம்
எதிரொலிக்க நீ...
முன்பின் தெரியாதவரைக்
கடப்பதைப்போல்
எவ்விதச் சலனமும் இன்றி
மௌனமாய் மாயமாய்
எதிர்வருவதும் கடந்துபோவதும்
எப்படித்தானோ நேரில் ?

- பொன்.தெய்வா
ஐவேலி.

## புதிதாய் பிறந்த குழந்தை

பின்னே எல்லோரும் போக,
தான் பெற்ற பெண்ணின் வரவுக்காக
அறுவை சிகிச்சை அறை வாசலில்
அழுதபடி நிற்கிறாள்
அம்மா...

---

## தேநீர்

சற்று கருத்த நிறம்
சந்தேகம் இல்லை பெண் தான்
ஆடையின்றி அருந்துவதில்
அத்தனைஅலாதி...

---

## ஈகோ

உடைந்து இருக்கும்
உறவுக்காக கொஞ்சம்
வளைந்து கொடுத்தால்
தரையில் கிடக்கிறது
தன்மானம்....

---

## புரியாமல் போன புதிருக்குள்

பூதம் இருப்பதை அறியாமல்
மூர்க்கமாக முடிச்சியை அவிழ்க்க
முற்பட்டதில் முகத்தில் அறைந்த
விடைகள் விதியை விளக்க
புண்பட்டு உள்ளத்தை உடைக்கிறது
புதைந்தே கிடக்கட்டும் இரகசியங்கள்...

---

நேற்றைய இரவின் முடிவில் நீ
விலகிய பொழுதில் வலி - விடியலில்
என்
உலராத தலையணையில்
உழன்று கொண்டிருக்கும் உனக்கு
தெரிகிறதா ஆறாத மனதின்
காயங்களும்
காயாத கன்னத்தின் ஈரங்களும்...

---

## பணம் புகழ் போதை

புதிதாய் மமதை
கர்வமாய் கதவை தட்ட
கரம் பிடித்து நின்ற சொந்தங்கள்
சில தூக்கி எறியபடுகின்றன- சில
தூக்கில் இடப்படுகின்றன...

---

## உன் குளிரூட்டப்பட்ட அறையின்

கோப்புகள் நிறைந்த மேசையில்
கடிகாரமாய் சுழன்று கொண்டிருக்கிறது
என் காதல்..

--

துர்க்கா சம்பத்குமார்

# துளிப்பாக்கள்

கரையில் நண்டு
தலைதூக்கி ரசிக்கிறது
விழுங்கிய கடலை

கரையில் நண்டோடு
ஓட்டப்பந்தயத்தில் முந்தும்
ஓடிவரும் கடலலை

தவறவிட்டவனை
தேடி அலைகிறது
வெள்ளத்தில் மிதக்கும் செருப்பு


ஆழ்ந்த தியானம்
துறவி ரசிக்கிறார்
பரந்த உலகின் அழகை

எங்கோ ஒலிக்கும் இருமல்
இதயத்தில் விழுந்து எழுகிறது
அப்பாவின் ஞாபகம்

பொம்மைகள் கூட
அநாதையாகிறது
குழந்தைகளில்லா வீடு



சா.கா.பாரதி ராஜா,
38-3, கைலாசநாதர் கோயில் தெரு,
பெரிய நத்தம்,
செங்கல்பட்டு. 603002.
9944315732




அபிநயா இராமமூர்த்தி,
வேளாண்மை 3ஆம் ஆண்டு,
நீடாமங்கலம்

# துளிகள்

## ஆயிரம் வோல்ட் மின்னலை

அரையடி கலசம் வென்றுவிடுகிறது
சக்தி
கலசத்துக்கா?
கடவுளையே படைத்த
மனிதனுக்கா?

## ஒரு

ஓட்டுக்கு
கெஞ்சி
ஒவ்வொரு
நாளும்
கெஞ்ச வைக்கிறான்
கஞ்சிக்கு
மிஞ்சியது
என் உசுருதான்
கொரொனாவிடமிருந்து.

## மழை நின்ற

இரவில்
கூண்டாக மொய்க்கிறது
மின்விளக்கை சுற்றி
ஈசல் கூட்டம்
காலையில்
கூண்டுக்கு மட்டும்
புயல் அடித்ததோ
தெரியவில்லை
பிணங்களாக கிடைக்கிறது
ஈசல்.

## தெருவெல்லாம்

பூ
தேவதை இல்லாமல் அழைக்கிறது
சுடுகாடு !

## திரும்பி

திரும்பி பார்த்தேன் திரும்பவில்லை
திருந்தவில்லை
நான்
அவள்
திரும்பும்வரை

## சில்வண்டு

சிறகடிக்குது
இறக்கையில்லாமல்
இருக்கைகளோடு
குழந்தைகள்

## பட்டம் பெற்றவன்

எல்லாம்
பதவி
கேட்டால்
பயிரிட யாருண்டு?
பட்டமும்,
பதவியும் தான்
அவன்
பசியைப் போக்குமோ!



- நல். கதிரேசன்,
kavitamizhakathir@gmail.com
8940227048

# போட்டி

மனிதவுயிர்களை
முதலிலுண்பது
யாரென்ற போட்டியில்

கொரோனாவை வென்றது
கொடும்பசி

--------

## அலுக்கவேயில்லை

ஆயிரம் முறை கேட்டும்
அலுக்கவேயில்லை

பாத்துபோயிட்டு வாப்பா
என்ற
அம்மாவின் வார்த்தைகளும்...

நேரமாச்சே பாப்பா
வீட்டுக்கு வந்துட்டாளா
என்ற
அப்பாவின் வார்த்தைகளும்...

--------

## பேருந்து குழந்தை

தார்சாலை
தாயின்
இடுப்பிலிருந்து
இறங்கிய பேருந்து
குழந்தை குலுங்கிக்
குலுங்கி அழுதது
மேடுபள்ளங்களில்

--------

நீ நிலா

நீ கொஞ்சம்
உள்ளே போ
வெளியே வரட்டும்

நிலா

--------

## மர்ம தேசம்

இலைகள் இருக்கட்டும்
வேர்கள் வேண்டாம்

அலைகள் அவசியம்
கடல்கள் கானலாகட்டும்

மேகம் முக்கியம்
வானம் தொலையட்டும்

ஆடைகள் இருக்கு
ஆன்மா எதற்கு

உடல்கள் உலவட்டும்
உணர்ச்சிகள் இல்லாமல்..

--

நேசமுடன் ஈசு

# தாமதம்

கடன் தீர்த்தபின் கையில் கிடைக்கும்
காசு;
விடியலுக்கு பின் எரியத் துவங்கும்
தெரு விளக்கு;
வீட்டுமனை ஆன வயலில் வளர
துவங்கும் நெற்பயிர்.

வாசல் தெளித்த பின் வரும் சாரல்
மழை;
கிளம்பி விட்ட ரயிலுக்கு எடுத்து விட்ட
பயணச்சீட்டு;
கார்காலம் முடிந்து வரும் குடை
ரிப்பேர் காரன்!

தூற்றி முடித்தபின் வீசும் காற்று!
குளிர் முடிந்து கிடைக்கும் போர்வை.
உற்றவர்களை இழந்தபின் கிடைக்கும்
உயர்வு!

------

## திருமணம்

தெய்வ சந்நிதி முன்பு
சுற்றம் சூழ வந்து
மாலை மாற்றி நின்று
மணம் முடித்து கொண்டு
இதுவே பாதை என்று
இறங்கியும் விட்டோம் இன்று!
பொன் நகை மின்ன
புன்னகை பூவாய் உதிர
புதிய பிறவிகள் போல
பூரித் திளைத்த அன்று !
பார்த்துப் பழகிய புவியும்
புதிதாய்த் தெரியுது இன்று!
இரவில் இறங்கி நின்று
இறுகப் பற்றிக் கொண்டு
ஏதும் தெரியாது வியந்து
எதற்கும் தயாராய் இருந்து!
தேடிக் கலைத்தோம் - மகிழ்ந்து
தொலையாத பொருளைக் கண்டு!
மகரந்த சேர்க்கை முடிந்து
மொட்டு மலரும் என்று
மாதம் பலவும் சுமந்து
சூரியக் கதிரைப் போன்று
சுடரென தலைமுறை ஒன்று
கையில் தவழுது இன்று!

------

## அவள் கால்தடம்

அலைகள் வந்து
அடித்துச் செல்லும்
எனத் தெரிந்தும்
சற்று நேரம்
அவள் கால் தடத்தை
பதித்து வைத்து
ஆறுதல் அடைகிறது
கடற்கரை!

------

## கன்னக் குழி!

உன் முகத்தில் நடக்கும்
அழகு போட்டியில்,
உன் கண்களும்
மூக்கும், உதடுகளும்
கூட்டணி வைத்தும்...
கடைசியில்
கன்னக்குழியில் விழுந்து
தோற்றேப் போய்விடுகின்றது!

--

ஜான் கரோல் ஜோ

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்**
**பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal    Thiravukolmagazine